டாக்டர் எச். வி. ஹண்டே

கள். இவர்கள் நிலைமை சீராகி வருகிறது என்று நமக்குத் தகவல் கிடைத்து இருக்கிறது. குடித்துவிட்டு ஓட்டுவதைப் பற்றி சொன்னார்கள். அதற்கு Alcohal Test என்ற முறையில் எந்த லாரி டிரைவராக இருந்தாலும் அவர்கள் குடித்து விட்டு ஓட்டுகிறார்கள் என்று போலீசார் புகார் கூறுவார்களானால் அவர் களை உடனடியாக மருத்துவ மனையில் டெஸ்டு மூலமாக அவர் குடித்து இருக்கிறார் என்றால் "He is suffering from intoxication. He has taken Alcohol". என்ற 2 பிரிவுகளாக பிரித்து அதற்கு உரிய தண்டனை கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. மருத்துவ மனைக்கு அவர்களை அழைத்துக்கொண்டு போய் டாக்டர்கள் பரிசோதனை செய்து அவர்கள் ஆல்கத்தால் எடுத்து இருக்கிறாரா குடித்து இருக்கிறாரா என்பதை தெரிந்து கொள்ள டாக்டர்களால் முடியும். அப்படிப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறோம்.

(57) சென்னை, 44 ஆவது வட்டம் டாக்டர் அம்பேத்கார் நகரில் டான்பாஸ்கோ ஸ்தாபனம் கட்டிவரும் வீடுகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் பரிதி இளம் வழுதி, சு. பாலன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. சு. பாலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, "சென்னை 44-வது வட்டம், டாக்டர் அம்பேத்கார் நகரில் குடிசை மாற்று வாரியம் சுமார் 380 குடும்பங்களுக்கு பட்டா வழங்கி, மாதம் ரூ. 10 அடிப்படை வசதிக்காக வசூல் செய்கிறது. அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க மாநகராட்சி, எம்.எம்.டி.ஏ., மற்றும் குடிசை மாற்று வாரியம் ஆகியவை திட்டம் தீட்டி ஒரு மத சார்புள்ள தனியார் ஸ்தாபனத்திடம் ஒப்படைத்து, அவர்களால் ஒரு சில வீடுகள் கட்டப்பட்டு, அவை தரமானதாக இல்லை என அரசுக்கு புகார் செய்து, மேற்கொண்டு கட்டுவது நிறுத்தப்பட்டது. தற்போது அதே ஸ்தாபனம் அப் பகுதியிலுள்ள காலி இடங்களை தன் வசமாக்கி, மதில் சுவர் எழுப்பி, தனக்கென சில கட்டிடங்களைக் கட்டி வருகிறது. இவ் வாறு மேற்கொண்டு வீடுகள் கட்டிக் கொடுக்காமல், காலி இடங் களைக் கைப்பற்றி தனிக் கட்டிடங்கள் கட்டப்படுவதால்வெள்ளம், தீ விபத்து போன்ற நேரங்களில் அப் பகுதி வாழ் மக்கள் பாதிக்கப் படும் நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சரின் னத்திற்குக் கொண்டு வருகிறேன்.

கவன ஈர்ப்புகள்

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி: பேரவை முன் கீழ்க் கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

சென்னை 44வது வட்டம், டாக்டர் அம்பேத்கார் நகர், குடிசைப் பகுதி அமைந்துள்ள நிலம் சென்னை மாநகராட்சிக்கு சொந்தமானதாகும். சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஒப்புதல் அளித்துள்ள வரைப்படத்தின் படி, சென்னைப் பெரு நகர் வளர்ச்சித் திட்டம் 1ன் கீழ் மேம்பாட்டுப் பணிகள் சென்னை மாநகராட்சியினரால் செய்யப்பட்டது. சென்னைப் பெரு நகர் வளர்ச்சித் திட்டம் 2ன் கீழ், குத்தகை மற்றும் விற்பனை உடன் பாட்டு பத்திரம் முறையில் நில உரிமை வழங்குவது, மற்றும் வீட்டு மேம்பாட்டுக் கடன் வழங்கும் பணி குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டது. இப் பகுதியில் 210 குடும் பங்களுக்கு குத்தகை, மற்றும் விற்பனை உடன்பாட்டு பத்திரம் வழங்கப்பட்டு, 190 குடும்பங்களுக்கு ரூ. 3,500 வரை வீட்டு மேம்பாட்டுக் கடன் வழங்கப்பட்டது. 1981ஆம் ஆண்டு நவம் பர் திங்கள் 4ஆம் நாளன்று சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இங்கு கூடுதல் மேம்பாட்டுப் பணிகளை டான் பாஸ்கோ என்ற சமூக சேவை சங்கம் செய்ய லாம் என முடிவு செய்யப்பட்டது. மேற்குறித்த குடிசைப்பகுதியில் உள்ள ஒரு பகுதியினரே டான் பாஸ்கோ சமூக சேவை சங்கத்தி னரை நேரடியாக அணுகி, அவர்களிடம் ரூ. 6,000ஐ மானியமாகப் பெற்று அச் சங்கத்தின் மூலமாக வீடுகளைக் கட்டிக்கொண்டனர். வீடுகள் கட்டும் பணி குடிசை வாசிகளுக்கும் இச் சங்கத்திற்கும் ஏற்பட்ட உடன்பாடே தவிர, குடிசைப் பகுதி மாற்று வாரியத் திற்கும் கட்டுமானப் பணிகளுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. இருந்தாலும் மேற்படி சங்கத்தினால் கட்டப்பட்ட வீடு தரமான தாக இல்லை என தனி நபர் ஒருவர் செய்த முறையீட்டின் பேரில், அதனை சரி செய்து தருமாறு அந் நிறுவனம் கேட்டுக் கொள்ளப்பட்டது. 1981ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 4ஆம் நாளன்று சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தில் நடந்த கூட்டத்தில் எடுத்த முடிவின்படி, சமுதாயப்பணிகளுக்கான வரை யறுக்கப்பட்ட திறந்தவெளி மனைகளை ஆக்கிரமிப்புகளிலிருந்து காக்கும் பொருட்டு, இச் சங்கம் மதில் சுவர் எழுப்பி பாதுகாக்கின் றது.

சமுதாயப் பணிகளுக்கென ஒதுக்கப்பட்ட இடம் அப் பணிகளுக் காகவும், இப் பகுதி வாழ் மக்களின் நலனுக்காக மட்டுமே உட் படுத்தப்படும். எனவே இப் பகுதியில் வெள்ளம், தீ விபத்து ஏற்படும் காலங்களில் இவ்விடங்களை குடிசைவாழ் மக்கள் உப யோகிக்க எவ்வித ஆட்சேபணையும் இருக்காது.

திரு. சு. பாலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இந்த விவர அறிக்கையில் 1981ஆம் ஆண் டுநவம்பர் திங்கள் 4ஆம் நாள் அன்று சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழு மத்தில்

கவன ஈர்ப்புகள்

(திரு. சு. பாலன்)

நடைபெற்ற கூட்டத்தில், மேற்படி அம்பேத்கார் நகர் பகுதியை அந்த டான் பாஸ்கோ ஸ்தாபனம் தத்து எடுத்துக் கொண்டு அங்குள்ள குடிசைகளை அகற்றி அவர்களுக்கு வீடு கட்டிக்கொடுப்பதாகவும், அதற்காக அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதாகவும், பல இலட்சக்கணக்கான ரூபாயை குடிசை மாற்று வாரியத்திற்கு நன்கொடையாகக் கொடுத்து இருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறதே, இது உண்மையா அப்படியானால் எவ்வளவு தொகை கொடுக்கப்பட்டுள்ளது என்பதோடு, அறிக்கையிலே சொன்னது போன்று, இந்த சமுதாயப் பணிகளுக்காக வரையறுக்கப்பட்ட திறந்தவெளி மனைகளை ஆக்கிரமிப்புகளிலிருந்து காக்கும் பொருட்டு, தாட்கோ மூலமாக, அரசாங்கத்தின் மூலமாகக் கட்டுவதாகச் சொல்கிறார்கள். அப்படி அவர்கள் கட்டுவதாக இருந்தால், ஏற்கனவே மதிற் சுவர்கள் கட்டுவதற்கு முன்னாலேயே அனுமதி பெற்று கட்டுகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : அவர்கள் கட்டுகின்ற கட்டிடங்களைப் பொறுத்த வரையில் அனுமதி பெற்று கட்டியிருக்கிறார்கள். அதிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காம்பௌண்ட் சுவர் கட்டியிருந்தால், உள்ளேயிருக்கின்ற இடத்தில் சிலர் கட்டிடங்களைக் கட்டியிருப்பதாகச் சொன்னார்கள். அப்படி ஏதாவது அனுமதி இல்லாமல் கட்டியிருந்தால் அதற்கான உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

சுற்றுச் சுவர்கள் பொறுத்த வரையில், ஏற்கனவே இரண்டு முறை அந்த இடத்திலே மற்ற நபர்கள் ஆக்கிரமிப்பு செய்ததன் காரணமாக குடிசை மாற்று வாரியம் 1982 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் அன்றும், 1983 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 6 ஆம் நாள் அன்றும் அங்கே இருந்தவர்களை அகற்றியுள்ளது. அந்த இடத்தினுடைய நிலத்தைப் பாதுகாக்கின்ற தன்மையில் தான் இந்தச் சுற்றுச் சுவர் கட்டுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது.

இறுதியாக மாண்புமிகு உறுப்பினர் கட்டப்பட்ட வீடுகளுக்கு அந்த நிறுவனம் கொடுத்த நிதியைப் பற்றி கேட்டார்கள். 90 வீடுகளைக் கட்ட இந்த சேவைச் சங்கம், ஒரு குடியிருப்பிற்கு ரூ. 6,000 வீதம் மானியம் வழங்கியிருக்கிறது.

(38) கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் எஸ். சிவராமன், சு. சிவராஜ் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு தொழில்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.